**3.** மத்திய அரசின் உதவியுடன் கருவூலப்பணிகளை கணினி மயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது நிதி மேலாண்மை முறை நடைமுறைபடுத்தப்பட்டு, பணப்பரிமாற்றங்கள் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்கள் மற்றும் யூனியன் பிரதேச துறைகளிடையே கணினி வழியாக நடைபெற்று பயனாளிகளுக்கு திட்டங்களின் பலன், வெளிப்படைத் தன்மையுடன் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

**4.** 2013-14ஆம் ஆண்டில் அனைத்து பிரிவினரின் தொடர் முயற்சியால் எனது அரசு அதிக திட்டச் செலவினமாக ₹ 1,665 கோடியை செலவு செய்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இச்சாதனைக்காக, எல்லா அதிகாரிகளையும், ஊழியர்களையும் வாழ்த்துகிறேன்.

**5.** புதுச்சேரி நிர்வாகத்தில் எனது குறுகிய கால அனுபவத்தில், அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல முன்னேற்றத் திட்டங்கள் பற்றி என்னால் அறிந்துகொள்ள முடிகிறது. 2013-14ஆம் ஆண்டில் வெவ்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான திட்டங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிக்க விழைகிறேன்.

**வேளாண்மை**

**6.** புதுச்சேரி மாநிலத்தின் முக்கிய பயிரான நெற்பயிரின் சராசரி உற்பத்தி ஹெக்டேர் ஒன்றிற்கு 4.38 மெட்ரிக் டன்னிலிருந்து 5.78 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த மூன்றாண்டுகளின் சராசரி உற்பத்தியைவிட 32 விழுக்காடு உயர்வாகும். அதுபோலவே கரும்பின் உற்பத்தியும் ஹெக்டேர் ஒன்றிற்கு 90 மெட்ரிக் டன்னிலிருந்து 100 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இது, 10 விழுக்காட்டிற்கு மேற்பட்ட உயர்வாகும். செம்மை நெல் சாகுபடித் திட்டத்தாலும் மற்றும் துல்லிய பண்ணை தொழில் நுட்பத்தினாலும் மேற்கண்ட சாதனையை எட்ட முடிந்தது.

**7.** தோட்டக்கலை பயிர் உற்பத்தியை அதிகரிக்க, தோட்டக்கலை சாகுபடி மூலம், வேளாண்மையை பன்முகமாக்கும் திட்டத்திற்காக ₹ 5.69 கோடி செலவு செய்யப்பட்டது.

மேம்படுத்தப்பட்ட விதை பயன்பாடு மற்றும் சான்றளிப்பு திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு சொந்தமான சுமார் 150 ஹெக்டேர் நிலப்பரப்பில் மேம்படுத்திய விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம், 1885.36 குவிண்டால் சான்றளிக்கப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு கிடைக்க வகை செய்யப்பட்டது.

**8.** உற்பத்தி செலவைக் குறைக்கவும், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், இயந்திரமயமாக்கலை அறிமுகப்படுத்துவது எனது அரசின் முயற்சியாகும். 28 டிராக்டர்களும், 27 நடவு நடும் இயந்திரங்களும், 17 பவர் டில்லர்களும், 102 நவீன மற்றும் பாரம்பரிய வேளாண் கருவிகளும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

**9.** விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க உறுதி செய்யும் வகையில், வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் அமைப்பதுடன், நிதி உதவியையும் எனது அரசு அளிக்கிறது. விவசாயிகள் சம்பா பருவத்தில் நெல்லை குறைந்த விலைக்கு விற்காமல் இருக்க, காரைக்கால் மத்திய கூட்டுறவு விற்பனைச் சங்கம் நெல் கொள்முதல் செய்ய சுழற்சி நிதியாக ₹ 2 கோடி அரசு அளித்தது.

## கால்நடைப் பராமரிப்பு

**10.** ஊரக வேலைவாய்ப்பை அதிகம் உருவாக்கும் தகுதியைப் பெற்றுள்ளதால் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் பண்ணைக்கு எனது அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. கால்நடை மருத்துவ நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மூலம், அனைத்து கால்நடை மருத்துவ வசதிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், 6,87,803 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை மற்றும் தடுப்பூசி அளிக்கப்பட்டது. 64 மருத்துவ முகாம்களும், 80 பூச்சி நீக்கும் முகாம்களும் நடத்தப்பட்டன. கடந்த ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் 3,000 பயனாளிகளில், 264 நபர்களுக்கு தலா 5 விடைக்கோழிகள் இலவசமாக வழங்கப்பட்டன. மீதமுள்ள நபர்களுக்கு நடப்பாண்டிற்குள் வழங்கப்படும். வீட்டுப் புழைக்கடையில் கோழி வளர்க்க 1,450 வான்கோழிகளும், 7,428 இருவிதப் பயன்பாடு கொண்ட கலப்பின பறவைகளும், 50 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்பட்டன. சென்ற ஆண்டில், 47,400 மெட்ரிக் டன் பால் மற்றும் 11.30 மில்லியன் கோழி முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கால்நடைக் கல்விக்கென புதுச்சேரி கால்நடைக் கல்லூரி சங்கத்திற்கு ₹ 12.50 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மூன்று பட்டமேற்படிப்புப் பிரிவுகளும் துவங்கப்பட்டுள்ளன.

**குடிமைப்பொருள் வழங்கல்**

**11.** இவ்வாட்சிப்பரப்பின் நான்கு பகுதிகளிலும் நியாய விலைக்கடைகள் மூலம், குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆதார் எண் மற்றும் நுண்ணறிவு அட்டை அடிப்படையில் பொது வினியோக பொருட்கள் வழங்கப்படுகின்றன. மொத்தமுள்ள 3,33,377 குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகளில் 2,28,333 நுண்ணறிவு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**12.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள அனைத்து உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கும் தலா 10 கிலோ ஒற்றை அவியல் அரிசி 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மீண்டும் இலவசமாக வழங்க இவ்வரசு முடிவு செய்தது. இத்திட்டத்தின்கீழ் பாப்ஸ்கோ மூலம் வெளிச்சந்தையில் இருந்து ஒற்றை அவியல் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, வினியோகம் செய்யப்படுகிறது.

**வணிக வரி**

**13.** இவ்வாட்சிப்பரப்பில் சீரிய வகையில் வணிகம் நடைபெறுவதற்கு எனது அரசு பல்வேறு வெளிப்படையான மற்றும் சிறப்பான நடவடிக்கைகள் எடுத்துள்ளது. 2013-14ஆம் ஆண்டில் இத்துறை ₹ 1,257 கோடியை வருமானமாக ஈட்டியுள்ளது.

சந்தையின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப 2014-15ஆம் ஆண்டிற்கு ₹ 1,380 கோடி வருவாய் இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் மதிப்புக்கூட்டு வரி புதுப்பித்தல் மற்றும் கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் 11,000 வணிகர்கள் பயன் பெறுவர்.

**கல்வி**

**14.** பள்ளி செல்லும் அனைத்து சிறார்களுக்கும் நவீன மற்றும் இலவசக் கல்வி வழங்குவது நமது நோக்கமாகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கல்வி அறிவு பெற்றோர் 86.55 விழுக்காடாக உள்ளது. இது, தேசிய விகிதாச்சாரமான 64.8ஐவிட அதிகம். இக்கல்வியாண்டு முதல், நமது மாணவர்கள் தேசிய அளவில் போட்டியிடுவதற்கு ஏற்ப மிகத்தரமான மற்றும் ஒரே மாதிரியான கல்வியைப் பெற உறுதிசெய்வதற்காக அனைத்து அரசு பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பிலும், ஆங்கிலவழி பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலும் “CBSE” கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எமது அரசு எடுத்தத் தொடர் முயற்சியால் அரசுப் பள்ளிகளில் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வின் தேர்ச்சி விகிதம் 80.24 விழுக்காட்டிலிருந்து 82.12 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 10ஆம் வகுப்பு

பொதுத்தேர்வில் அனைவரும் வெற்றி பெறவும், நல்ல மதிப்பெண்கள் பெறவும் ஏதுவாக, “சிகரத்தை நோக்கி” என்னும் புதுமையான திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

**15.** 2013-14ஆம் ஆண்டில், புதுச்சேரி யூனியன் பிரதேசம் துவக்கக் கல்வி மற்றும் மேல் துவக்கக் கல்விப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதி அடிப்படையில், தேசிய அளவிலான கல்வி வளர்ச்சி குறியீட்டில் முதலிடம் வகிக்கிறது. மேற்படி, வளர்ச்சியை நிலைநிறுத்த “சர்வ சிக்ஷா அபியான்” திட்டத்தின்கீழ் ₹ 7.58 கோடி செலவில் 90 கூடுதல் வகுப்பு அறைகள் மற்றும் 50 கணினிகள் அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. பெருந்தலைவர் காமராஜர் கல்வி நிதி உதவித் திட்டத்தில் மாறுதல் செய்து வருவாய் உச்சவரம்பு நீக்கப்பட்டு 7,244 மருத்துவம் மற்றும் பொறியியல் மாணவர்களுக்கு ₹ 41.70 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் இராஜிவ் காந்தி காலை உணவுத்திட்டத்தின் மூலம், பால் மற்றும் பிஸ்கட் வழங்கப்படுகிறது. 107 மாணவர்களுக்கு காது கேட்கும் கருவி வழங்கப்பட்டுள்ளன. பார்வை குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்ட 275 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளன.

புதுச்சேரியில் விளையாட்டு மற்றும் இளைஞர் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் இராஜிவ் காந்தி உள்விளையாட்டு அரங்கத்தை ₹ 6 கோடி செலவில் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

**மின்துறை**

**16.** எனது அரசு, மாநிலத்தின் ஒவ்வொரு மின் நுகர்வோருக்கும் தேவையான தரமான தடையில்லா மின் விநியோகத்தை நியாயமான கட்டணத்தில் 24 மணி நேரமும் வழங்க திட்டமிட்டுள்ளது. இதனை செயல்படுத்த 25 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், 10 மின்மாற்றிகளின் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. 10,000-திற்கு மேற்பட்ட வீடுகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. “ஒரு குடிசை ஒரு விளக்கு” திட்டத்தின்கீழ் 44 இணைப்புகள் பொதுப் பிரிவினருக்கும் 25 இணைப்புகள் அட்டவணை இனத்தவருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**17.** புதுச்சேரி நகரப்பகுதியில் அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் வெங்கட்டா நகரில் ₹ 54 கோடி செலவில் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாற்றி அமைக்கப்பட்ட

அதிவிரைவு மின் மேம்பாடு மற்றும் சீரமைப்பு திட்டத்தின்கீழ், ₹ 84.78 கோடி மதிப்பீட்டில் மின்பகிர்வை வலுப்படுத்த மின்துறை அமைச்சகத்திடமிருந்து முதலீட்டு ஒப்புதலை பெற்ற, கூட்டு மின்வரைமுறை கழகத்தின் கீழுள்ள யூனியன் பிரதேசங்களில் முதல் யூனியன் பிரதேசம் புதுச்சேரி ஆகும். நல்ல நிலையில் உள்ள மூன்று குண்டு பல்புகளுக்கு பதிலாக தலா ₹ 10 விலையில் மூன்று LED பல்புகள் புதுச்சேரி பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது. இதனால், பல்பு ஒன்றுக்கு 54 யூனிட்டுகள் ஆண்டு ஒன்றுக்கு சேமிக்க முடியும். கிழக்கு, கடற்கரைச் சாலையில், கனகசெட்டிக்குளத்திலிருந்து பிள்ளைச்சாவடி வரையில் உள்ள விளக்குகளுக்கு மாற்றாக பிரகாசமான வெளிச்சம் தருவதற்காக LED விளக்குகள் போடப்பட்டுள்ளன.

**மீன்வளம்**

**18.** மீனவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடவும், அவர்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கையை அளித்திடவும் அரசு சிறப்புக் கவனம் செலுத்துவதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ‘தானே’ புயலின்போது பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத சேதமடைந்த மீன்பிடிக்கலங்களின் விடுபட்ட உரிமையாளர்களுக்கு ₹ 4.50 கோடி இழப்பீடு வழங்கப்பட்டது. ஏனாம் பகுதியில் ‘ஹெலன்’ புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ₹ 3.52 கோடி நிவாரண இழப்பீடாக அளிக்கப்பட்டது.

அண்டை நாட்டு கடற்படையால் கைது செய்யப்பட்ட ஒன்றும் அறியாத 76 மீனவர்கள் மற்றும் 8 படகுகளை விடுவிக்க அரசு சிறப்பான நடவடிக்கை மூலம் மத்திய அரசிடம் எடுத்துச் சென்றதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மாஹே மீன்பிடி துறைமுகத்தின் கட்டுமானப் பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

**சுகாதாரம்**

**19.** நமது யூனியன் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சிறந்த மருத்துவச் சேவை இலவசமாக அளிப்பதற்கு நாங்கள் குறிக்கோள் கொண்டுள்ளோம். எமது அரசினால் எடுக்கப்பட்ட சீரிய முயற்சியின் காரணமாக பேறுகாலத்திற்கு முன்பு சிகிச்சை பெறும் தாய்மார்களுக்கிடையேயான எச்.ஐ.வி. தொற்றின் விகிதம் 0.13 விழுக்காட்டிலிருந்து பூஜ்ஜியம் விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட ஆலோசனை மற்றும் பயிற்சி மையங்கள் (ICTC) இலாசுப்பேட்டை, முத்தியால்பேட்டை, காலாப்பட்டு மற்றும் அரியாங்குப்பம் ஆரம்ப சுகாதார மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நலவழித்துறையில் பல்வேறு பதவிகளில், 94 நபர்களுக்கு பதவி உயர்வும், 156 நபர்கள் புதியதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசு இந்திரா காந்தி மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 83 நபர்கள் விரிவுரையாளர்கள் பணிக்கும்

165 நபர்கள் செவிலியர் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 107 பொதுப்பிரிவு மருத்துவ அதிகாரிகளும், 46 சிறப்பு மருத்துவ அதிகாரிகளும், மத்திய தேர்வாணைக்குழு மூலமாக தேர்வு செய்யப்பட உள்ளனர்.

**20.** குழந்தை இறப்பு விழுக்காட்டைக் குறைக்கும் பொருட்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் "குழந்தை நல முனைப்புக் கவனிப்புப் பிரிவு" ஒன்றும் "கருவுற்ற மகளிர் நல முனைப்புக் கவனிப்புப் பிரிவு" ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோயைக் கண்டறிவதற்காக ₹ 93 இலட்சம் செலவில் "மமோகிராம்" என்னும் நவீனக் கருவி புதியதாக நிறுவப்பட்டுள்ளது. மேலும், புதியதாகப் பிறக்கும் குழந்தை மற்றும் கருவுற்ற தாய்மார்களுக்கு ஏற்படும் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிய வல்லுநர் குழுவின் திறனைப் பயன்படுத்துவதற்கு, சென்னை மலர் மருத்துவமனை ஐஸ்வர்யம் அறக்கட்டளையுடனும், குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளின் கண் பார்வை தொடர்பான குறைபாடுகளைக் கண்டறிய புதுச்சேரி அரவிந்தர் கண் மருத்துவமனையுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. மாஹேயில் உள்ள அரசு பொதுமருத்துவ மனையில் விபத்து கால அவசர சிகிச்சைப் பிரிவின் கட்டுமானப் பணி துவங்கப்பட்டுள்ளது.

**21.** புதுச்சேரி அன்னை தெரேசா பட்ட மேற்படிப்பு மற்றும் சுகாதார அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தில், இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், சித்தா மற்றும் ஓமியோபதி மருத்துவத்தில் புதிய பட்டய படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பொதுச்சுகாதார பரிசோதனைக்கூடத்தில், (AYUSH) மருந்துப் பொருள் பரிசோதனைக் கூடமும் திறக்கப்பட்டுள்ளது.

**தொழில்கள்**

**22.** அதிகபட்ச வேலைவாய்ப்பினை உருவாக்கும்பொருட்டு நீடித்த மற்றும் சரிவிகித தொழில் வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக்கொண்டு புதிய தொழிற்கொள்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. எமது அரசு, ஆற்றல் திறன்மிக்க, குறைந்த நீரைப் பயன்படுத்துகிற, உயர் தொழில்நுட்பம் மற்றும் அறிவு சார்ந்த அடிப்படையிலான தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன்னுரிமை அளிக்கும். கடந்த வருடம் ₹ 60 கோடி முதலீட்டில் 76 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) உற்பத்தியை துவக்கி, 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. தொழில்துறைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட சலுகைகள் திரும்பப்பெற்றதால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மீண்டெழுந்து செயல்பட, எனது அரசு உறுதிபூண்டுள்ளது. தீவிர கண்காணிப்பு முறையால் பல்வேறு துறைகளில் நீண்டகாலமாக

தேங்கியிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைந்தது. புதுச்சேரியின் மிகப் பழமை வாய்ந்த நெசவாலையான ஆங்கிலோ பிரெஞ்சு நெசவாலையின் "C" பிரிவு நூற்புப் பணியினை ஆரம்பித்து வேலையின்றி இருந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியது. இந்நெசவாலையின் இதர பிரிவுகளையும் புனரமைக்கத் தேவையான நிதியைப் பெறுவதற்கு எமது அரசு நடவடிக்கை எடுக்கும்.

**தகவல் தொழில்நுட்பம்**

**23.** அரசு அதிகாரிகள், மாணவர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு தகவல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி அளிப்பதற்காக நூலகம் மற்றும் 30 இருக்கைகள் அடங்கிய இரண்டு ஆய்வுக்கூடங்கள் மற்றும் 30 இருக்கைகள் அடங்கிய ஒரு வகுப்பறை கொண்ட பயிற்சி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலம்**

**24.** 2013-14ஆம் ஆண்டில் பல்வேறு பிரிவுகளில் 10 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 484 நபர்கள் பயனடைந்தனர். கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள்

அளிப்பதற்கு, 53 வகையான தொழிலாளர்கள், புதுச்சேரி கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள், நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1-4-2013 முதல் வேலைவாய்ப்புப் பதிவை புதுப்பித்தலை இணையதளம் மூலம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 23-1-2014 முதல் இணையதளம் மூலம் பதிவு செய்வதற்கும் மற்றும் தகுதிவாய்ந்தவர்களை பரிந்துரை செய்வதற்கும் ஒரு இணையதள வசதி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**25.** துறைமுகப் பணியாளர்களின் வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவதற்கும் அவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கும் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், “2014ஆம் ஆண்டு புதுச்சேரி துறைமுகப் பணியாளர்கள் (வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துதல்) விதிகள்” மற்றும் “2014ஆம் ஆண்டு புதுச்சேரி துறைமுகப் பணியாளர்கள் (ஆலோசனைக் குழு) விதிகள்” ஆகியவை உருவாக்கப்பட்டன. காரைக்காலில், கட்டுமான அமைப்புசாரா துறைப்பிரிவில், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பணியாளர்களுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன் பாதுகாப்பு அளிப்பதற்காக 2014ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் “ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டம்” துவங்கப்பட்டுள்ளது.

**26.** அனைத்துத் துறைகளிலும், மனித ஆற்றல் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, தொழில்பழகுநர் பருவப் பயிற்சி திட்டத்தின்கீழ், இவ்வாட்சிப்பரப்பில் பயிற்சிபெறும் தொழில் பழகுநர்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர பயிற்சி உதவித்தொகை அனைத்து நான்காண்டு கால பயிற்சிக்கும் உயர்த்தப்பட்டுள்ளது. புத்தகம் கட்டுதல் மற்றும் தகவல் பதிவு செய்தல் ஆகிய தொழிற்பிரிவுகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு அளிக்கப்படும் மாதாந்திர பயிற்சி உதவித்தொகை ₹ 1,000ல் இருந்து ₹ 2,400ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**27.** செயல்திறனை நிலை உயர்த்தவும், பள்ளிப்படிப்பை பாதியில் கைவிட்டவர்கள் தற்போது வேலைசெய்து வரும் பணியாளர்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையச் (I.T.I.) சான்றிதழ் பெற்றவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தவும், தொழிற்பயிற்சி அளிப்பவராகப் பதிவுசெய்துள்ள 8 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் செயல்திறன் மேம்பாட்டு முயற்சித் திட்டத்தின்கீழ், 18 தொழிற்பிரிவுகளில் தற்காலத்திற்கேற்ற வேலைவாய்ப்பு பெறத்தக்க செயல்திறன் பாடப்பிரிவுகளில் 416 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 'புதுச்சேரி கட்டடம் மற்றும் பிற கட்டுமானப் பணியாளர்கள் நலவாரியத்தில்' ஏறத்தாழ 38,400 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். நலப்பயன்களாக உறுப்பினர்களுக்கு ₹ 1.35 கோடி தொகை வழங்கப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி**

**28.** எனது அரசு அதன் குடிமக்களுக்கு சிறந்த நகர வசதிகள் மற்றும் வாழ்விடங்களை அளிப்பதற்கு குறிக்கோள் கொண்டுள்ளது. கென்னடி நகர் (உருளையன்பேட்டை), பிரியதர்ஷனி நகர் (உருளையன்பேட்டை), சுப்பையா நகர் (உருளையன்பேட்டை), தெபேசன்பேட் (முத்தியால்பேட்டை), விழுதியூர் (நிரவி காரைக்கால்), பொன்பேத்தி (நெடுங்காடு காரைக்கால்) ஆகிய இடங்களில் அங்கன்வாடி மையங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடந்து வருகிறது. நேதாஜி நகர், சண்முகாபுரம், மணவெளி, பருத்திக்குடி, தென்கரைபேட் மற்றும் போலகம் ஆகிய இடங்களில் சமுதாயக்கூடங்கள் மற்றும் பல்நோக்குக் கூடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பேருந்து பயணிகள் நிழற்குடை, கழிப்பிட கட்டிடங்கள், சுடுகாடு / இடுகாடு, குடிநீர்க் குழாய்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தம்**

**29.** பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை (பணியாளர் சிறகம்) கடந்த ஆண்டு ஒன்பது துறைகளுக்கு அலுவலால் (Ex-Officio) செயலகத் தகுதி அளித்ததால், அத்துறையில் பணிகள்

விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக உள்ளது. உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி குடிமைப்பணிகள் வாரியம் அமைக்கப்பட்டது. இந்நிருவாகத்தை வலுப்படுத்த ஏறக்குறைய பல்வேறு பதவிகளுக்கு 600 நேரடி நியமனங்கள் செய்யப்பட்டது. அதுபோல் பல்வேறு அலுவலர்களுக்கு 400 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது. மேலும், 293 முழுநேர தினக்கூலி ஊழியர்கள் M.T.S. என்னும் நிரந்தரப் பணியாளர்களாக பதவி உயர்வு பெற்றனர். அதுபோல 293 பகுதிநேர ஊழியர்கள் முழுநேர தினக் கூலி ஊழியர்களாக பணியமர்த்தப்பட்டனர். அமைச்சக ஊழியர்கள் ஒரே துறையில் நீண்ட நாள் பணி செய்வதைத் தவிர்க்க, சுழற்சி முறையில் பணிமாற்றம் செய்யப்பட்டனர்.

**காவல்**

**30.** காவல் படையை வலுப்படுத்த 2013-14ஆம் ஆண்டில் 623 காவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். மேலும், கடலோர காவல்படையில் பல்வேறு பதவிகளில் 169 பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்துக் காவல் நிலையங்களையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் தேசிய அளவில் இணைக்கும் பொருட்டு தேசிய மின் ஆளுமை திட்டத்தின்கீழ் "குற்றம் மற்றும் குற்றவாளிகள் தடம் அறிதல் வலைதள முறை" நடைமுறைப்

படுத்தப்பட்டது. இதற்காக மத்திய உள்துறை அமைச்சகம் நமது யூனியன் பிரதேசத்திற்கு ₹ 9.93 கோடி ஒதுக்கீடு செய்து ₹ 2.19 கோடி விடுவிக்கப்பட்டு முழுமையாக செலவிடப்பட்டது. ஏனாமில் புதியதாக கட்டப்பட்ட போக்குவரத்து காவல் நிலையக் கட்டடம் திறக்கப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏனாம் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நிரந்தர கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது.

**துறைமுகம்**

**31.** காரைக்கால் துறைமுகத்தில் இரண்டாம் கட்டப் பணி நடைபெற்றுக்கொண்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்துறைமுகம் கடந்த ஆண்டில் 6.23 மில்லியன் டன் சரக்குகளை கையாண்டதில் அரசுக்கு ₹ 11.43 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

**பொதுப்பணி**

**32.** சாலைகள், பாலங்கள், குடிநீர், கழிவுநீர் வசதிகள் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் அரசு கட்டடங்கள் ஆகியவற்றை அமைத்து பராமரிப்பதில் பொதுப்பணித்துறை புதுச்சேரியிலேயே ஒரு முதன்மையான தொழில்நுட்ப அமைப்பாக செயல்படுகிறது. கடந்த நிதியாண்டில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே மணமேட்டில் 400 மீட்டர் நீளமுள்ள இருவழிச் சாலை கொண்ட

பாலம் ₹ 19.72 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மணலிப்பட்டில் ₹ 8 கோடி செலவில் தடுப்பணையுடன்கூடிய உயர்மட்ட பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மலட்டாற்றின் குறுக்கே நீர் சேகரிப்பு அமைப்புடன்கூடிய மற்றொரு மேம்பாலம் ₹ 13.19 கோடி செலவிலும் சிவராந்தகம் கிராமத்தில் குடுவையாற்றின் குறுக்கே இருவழி மேம்பாலம் ₹ 7.24 கோடி செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ₹ 6.40 கோடி செலவில் நீதிமன்ற வளாகம் (கட்டம்-II) பொது பயன்பாட்டு பகுதி, சமரச மையம் மற்றும் சட்ட உதவி மையத்துடன் கட்டி முடிக்கப்பட்டு மார்ச் 2014ல் திறந்து வைக்கப்பட்டது. ₹ 3 கோடி செலவில் நீதித்துறை அதிகாரிகளுக்கு 6 குடியிருப்பு வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. காரைக்காலில் திருமலைராஜனார் ஆற்றின் குறுக்கே 93 மீட்டர் நீளமுள்ள புதியப் பாலம் ₹ 12.84 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கழிவுநீர்த் திட்டம் புதுச்சேரி நகரப் பகுதியில் ₹ 262 கோடி செலவில் கட்டும் பணி மே 2013இல் மீண்டும் துவங்கப்பட்டது. நவீன வசதிகளைக் கொண்ட மீன் அங்காடி கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

**33.** மண்ணாடிப்பட்டு கொம்யூன் தேத்தாம்பாக்கம் கிராமத்தில் ₹ 1.78 கோடி செலவிலும், பாகூர் கொம்யூன் இருளஞ்சந்தை கிராமத்தில் ₹ 1.28 கோடி செலவிலும், குடிநீர் வழங்கல்

முறையை மேம்படுத்துதல் போன்ற குடிநீர்த் திட்டங்கள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேலும், சுத்துக்கேணி கிராமத்திலும், T.N. பாளையம் கிராமத்திலும் தற்போது இருந்துவரும் குடிநீர் வழங்கல் முறையை மேம்படுத்துவதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன. அரியாங்குப்பம் R.K. நகரில் 20 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கட்டுமானம் நடைபெற்று வருகிறது. 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி ₹ 2.24 கோடி செலவிலான புதிய குடிநீர் வழங்கல் முறை காரைக்கால் மேலகாசாக்குடி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில் 26 இடங்களில் குடிநீர் தூய்மைப்படுத்தும் நிலையங்கள் ₹ 3.00 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

**34.** காரைக்காலில் வலத்தமங்கலத்திற்குச் செல்லும் அணுகுச்சாலை ₹ 3 கோடி செலவில் 3 கிலோமீட்டர் நீளத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. திருநள்ளாறு கோயில் நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ₹ 8 கோடி திட்டச்செலவில் நளன்குளப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**வருவாய்**

**35.** நகர எல்லைக்குள் போக்குவரத்தைச் சீராக்கவும், காரைக்கால் வழியாக செல்லும் வாகனங்களின் இயக்கத்தை எளிதாக்கவும், கிழக்கு புறவழிச்சாலை அமைப்பதற்காக அக்கரைவட்டம், கீழையூர் தெற்கு, கீழையூர் வடக்கு வருவாய்க் கிராமங்களில் 17 ஹெக்டேர் பரப்புள்ள நிலம் கையகப்படுத்தபட்டு, பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராஜிவ் காந்தி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், இந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் 1,826 பயனாளிகளுக்கு ₹ 5.97 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நிலச் சீர்திருத்தத்தின்கீழ் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலத்திலிருந்து காரைக்கால் மாவட்டத்தின் நல்லெழுந்தூர் வருவாய்க் கிராமத்தில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு, 216 L.G.R. பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**சமூகநலம்**

**36.** எமது அரசு மக்கள் நலனுக்கு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. 20,952 மாற்றுத் திறனாளிகளுக்கு ₹ 27 இலட்சம் அளவுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 295 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டுகள் அளிக்கப்பட்டுள்ளன. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும்

சிறுபான்மை வகுப்பைச் சார்ந்த 1,533 மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் மெட்ரிக் படிப்புக்குப் பிந்தைய படிப்புதவித் தொகையாக ₹ 35 இலட்சம் அளிக்கப் பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு நிதி உதவிப் பெறும் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு பயிலும் 14,977 மாணாக்கர்களுக்கு ₹ 42 இலட்சம் செலவில் மழை அங்கிகள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் / முதியோர் / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான இல்லங்கள் நடத்தும் 30 அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவித்தொகையாக ₹ 1.41 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் உள்ள குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் "புதுச்சேரி குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையம்" அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

**குழந்தைகள் மற்றும் மகளிர் மேம்பாடு**

**37.** எமது அரசு மூத்த குடிமக்களின் நலனைப் பாதுகாப்பதற்கு உறுதிபூண்டுள்ளது. முதியோர், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் ₹ 1,000லிருந்து ₹ 1,100ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தற்போது இருந்துவரும்

1,19,148 பயனாளிகளுடன் கூடுதலாக 4,000 புதிய பயனாளிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். 788 அங்கன்வாடி மையங்களில் பதிவுசெய்துள்ள 27,325 குழந்தைகள் மற்றும் 8,980 தாய்மார்களுக்கு, 365 நாட்களுக்கும் ஊட்டச்சத்து அளிக்கப் படுகிறது.

**ஆதிதிராவிடர் நலம்**

**38.** அட்டவணை இனத்து மக்களின் வாழ்க்கைத்தரம் சமூகப் பொருளாதார தரம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றை மேம்படுத்த எனது அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அட்டவணை இனத்து மக்களுக்கு நிரந்தர குடியிருப்புகள் கட்டும் வகையில், 'பாரத ரத்னா இராஜிவ் காந்தி கல்வீடு கட்டும்' திட்டத்தின்கீழ், 968 அட்டவணை இனத்து மக்களுக்கு தலா ₹ 4 இலட்சம் வீதம் வீட்டு மானியம் அளிக்கப்பட்டது. மேலும், பழுதடைந்த வீடுகளை மீண்டும் புதியதாக கட்ட மானியம் வழங்க ஏதுவாக 2013-14ஆம் ஆண்டில் புதுச்சேரி ஆதிதிராவிடர் மேம்பாட்டுக் கழகத்திற்கு ₹ 20 கோடி வைப்புத் தொகையாக கொடுக்கப்பட்டுள்ளது. HUDCO மற்றும் JNNURM திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதி அளிக்க 2013-14ஆம் ஆண்டில் ₹ 11.58 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

**39.** அனைத்து அட்டவணை இனத்து மக்களுக்கும் ஆடைகள் பண்டிகைக் காலங்களில் இலவசமாக வழங்கப்பட்டன. 702 பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக தலா ₹ 25,000 அளிக்கப்பட்டது. கலப்புத் திருமணம் செய்துகொண்ட 145 தம்பதிகளுக்கு ஊக்கத்தொகையாக தலா ₹ 50,000 வழங்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் கல்வி நிதி உதவித் திட்டத்தின்கீழ் சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்ட 525 அட்டவணை இனத்து மாணவர்களுக்கு நிதிஉதவி அளிக்கப்பட்டது.

**சுற்றுலா**

**40.** இந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை (GSDP) உயர்த்துவதில் சுற்றுலாத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. 2013ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 9 விழுக்காடாக அதிகரித்துள்ளது. உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக புதுச்சேரி மற்றும் காரைக்காலை உள்ளடக்கி இரண்டு புதிய வட்டச் சுற்றுலாக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. திருநள்ளார் கோவில் நகர மேம்பாட்டுப் பணிகளுக்காக ₹ 14 கோடி செலவு செய்யப்பட்டள்ளது. இலக்கு

வணிகத்திற்காக புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. முருங்கப்பாக்கத்தில் கலை மற்றும் கைவினை கிராமம் அமைத்தல், புதுச்சேரியில் சுண்ணாம்பாற்றை அழகுப்படுத்துதல் மற்றும் உப்பளத்தில் அரசு சுற்றுலா இல்லத்தை சீரமைத்தல் ஆகிய மத்திய அரசு ஊக்குவிப்புத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும், அரிக்கமேட்டினை மேம்படுத்துதல், புதுச்சேரியில் ஊசுட்டேரியை மேம்படுத்துதல், புதுச்சேரியில் பாரம்பரிய நினைவுச் சின்னங்களுக்கு ஒளிவிளக்கு அமைத்தல் மற்றும் ஏனாம் கோபுரத்தைச் சுற்றி பொழுதுபோக்கு பூங்கா அமைத்தல் போன்ற செயல் திட்டங்களுக்காக சுற்றுலா அமைச்சகத்தால் இந்த ஆண்டு ₹ 48 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனாமில் நடைப்பாதைக்கான மூன்றாம் கட்ட கட்டுமானப் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பணி இவ்வாண்டிற்குள் முடிக்கப்படும்.

### அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

**41.** மாசுக்கட்டுப்பாட்டை கண்காணிக்கும் வகையில் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் அளவு மற்றும் தரத்தை சோதனைச் செய்திட, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புடன் தொடர்பு வசதி மூலம், நேரடியாக கண்காணிக்கும் வகையில், கருவிகளை அமைத்திட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை

வழங்கப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் கிடைக்கும் காற்றின் ஆற்றலை கணக்கிடும் வகையில் காற்று கண்காணிக்கும் நிலையம் ஒன்று அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**42.** எமது அரசு அனைவருக்கும் கல்வியை மேம்படுத்துதல், சிறந்த சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகளை அளித்தல், நலிந்த பிரிவினரை உயர்த்துவதற்காக விரைவார்ந்த சமூகப் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துதல் மற்றும் இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து நான்கு வட்டாரப் பகுதிகளின் சரிவிகிதமான மற்றும் சீரான வளர்ச்சியை அடைவதற்கு பணியாற்றுதல் ஆகியவற்றுக்கு உறுதிபூண்டுள்ளது.

**43.** புதுச்சேரி, தொன்மைவாய்ந்த புனித பூமியாக இருப்பதால், அதன் அமைதி மற்றும் சாந்தநிலை காரணமாக பிற பகுதிகளிலிருந்து மக்களை ஈர்த்து வருகிறது. எமது அரசு சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்குள், அமைதியையும் ஒற்றுமையையும் தொடர்ந்து பேணிவருகிறது. வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தாங்கள் அனைவரும் ஒத்துழைப்பையும் மதிப்புமிக்க கருத்துரையையும் வழங்குவீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அமைதியை நேசிக்கிற இவ்வாட்சிப்பரப்பு மற்றும் அதன் மக்கள் நலன் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக

உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்மீது ஆக்கபூர்வமான மற்றும் பயனுடைய விவாதங்களுக்காக இக்கூட்டத்தொடரைப் பயன்படுத்திக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

**44.** இக்கூட்டத்தொடரில் தங்களின் கலந்தாய்வு விவாதங்கள் வெற்றிபெற நான் உங்களை வாழ்த்துகிறேன்.

***நன்றி !***

***ஜெய் ஹிந்த் !!***